**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண் : 208** **நாள்: 19.12.2018**

**பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதை தடை செய்வது குறித்த விழிப்புணர்வு கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் இன்று நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதத்தில் விதி எண் 110ன் கீழ் வருகின்ற 01.01.2019 அன்று முதல் தமிழ்நாடு முழுவதும் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்கள் முற்றிலும் தடை செய்யப்படுவதாக அறிவித்துள்ளார்கள். அதனைத் தொடர்ந்து, பிளாஸ்டிக் பயன்படுத்துவதை தடை செய்வது குறித்த விழிப்புணர்வு கூட்டம் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ரிப்பன் மாளிகையில் உள்ள அம்மா மாளிகையில் இன்று (19.12.2018) நடைபெற்றது.

இக்கூட்டத்தில், ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பொருட்களான உணவுப்பொருட்களை கட்ட பயன்படுத்தும் பிளாஸ்டிக் ஒட்டும் தாள், உணவு அருந்தும் மேஜையின் மீது விரிக்கப்படும் பிளாஸ்டிக் தாள், பிளாஸ்டிக்காலான தெர்மாக்கோல் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட காகிதத் தட்டுகள், பிளாஸ்டிக் பூசப்பட்ட காகித குவளைகள், பிளாஸ்டிக் தேநீர் குவளைகள், பிளாஸ்டிக் குவளைகள், தெர்மாக்கோல் குவளைகள், நீர் நிரப்ப பயன்படும் பைகள்/பொட்டலங்கள், பிளாஸ்டிக்காலான உறிஞ்சு குழல்கள், பிளாஸ்டிக் பைகள் (எந்த அளவிலும், எந்த தடிமனாக இருப்பினும்), பிளாஸ்டிக் பூசப்பட்ட பைகள், பிளாஸ்டிக் கொடிகள், நெய்யாத பிளாஸ்டிக் பைகள் போன்ற 14 வகையான பிளாஸ்டிக் பொருட்கள் 01.01.2019 முதல் முற்றிலும் தடைசெய்யப்பட்டுள்ளது. இதன் பயன்பாட்டை வணிகர்கள், பிளாஸ்டிக் பொருட்கள் உற்பத்தியாளர்கள் மற்றும் பொதுமக்கள் தவிர்க்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

இவ்வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு பதிலாக வாழையிலை, பாக்குமர இலை, அலுமினியத்தாள், காகித சுருள், தாமரை இலை, கண்ணாடி/உலோகத்தால் ஆன குவளைகள், மூங்கில்/மரப்பொருட்கள், காகித குழல்கள், துணி/காகிதம்/சணல் பைகள், காகித/துணி கொடிகள், பீங்கான் பாத்திரங்கள், மண் கரண்டிகள், வெட்டுப் பொருட்கள் மற்றும் மண் குவளைகள் போன்ற 12 வகையான பொருட்களை பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டது. இப்பொருட்கள் முற்றிலும் பாதுகாப்பான சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களாகும்.

மேலும், இக்கூட்டத்தில் கலந்துகொண்ட பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் வியாபாரிகளிடம் பிளாஸ்டிக் பொருட்கள் தடை செய்வதினால் அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாத வகையில் பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு ஏற்ற மறுசுழற்சி செய்யக்கூடிய பொருட்களை உற்பத்தி செய்ய அறிவுறுத்தப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட குடியிருப்பு நல சங்கங்கள், தன்னார்வதொண்டுநிறுவனங்களின் பிரதிநிதிகளிடம் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்துவதனால் ஏற்படும் தீமைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. மேலும் சுற்றுச்சூழலை பாதுகாக்க பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள், குடியிருப்பு சங்கங்கள் இதர நிறுவனங்கள், மற்றும் பொதுமக்கள் தங்களின் முழு ஒத்துழைப்பு அளித்து பிளாஸ்டிக் மாசில்லா நிலையை உருவாக்க வேண்டுமென கேட்டுக்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில் துணை ஆணையாளர் (சுகாதாரம்) திரு.பி.மதுசுதன் ரெட்டி, இ.ஆ.ப., அவர்கள், வட்டார துணை ஆணையாளர்கள் திருமதி எஸ்.திவ்யதர்ஷினி, இ.ஆ.ப., அவர்கள், டாக்டர் சுபோத்குமார், இ.ஆ.ப., அவர்கள், திரு.எஸ்.கோபால சுந்தர ராஜ், இ.ஆ.ப., அவர்கள், தலைமைப் பொறியாளர் (கட்டடம்) திரு.என்.மகேசன் அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள், தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரிய மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், குடியிருப்பு நலச் சங்கங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள், உணவகச் சங்கங்கள், பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கப் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**